களில் இடம் அளிப்பதால் நம் மாநிலத்திலுள்ளவர்களுக்கு இடம் போதவில்லை என்று அறிந்து நம் மாநிலமாணவர்களுக்கு அதிக ஸ்தானம் ஒதுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பெண்கள் ஒரு குறிப்பிட்ட பர்செண்டேஜ் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. அந்த பர்செண்டேஜை அமுலுக்குக் கொண்டுவருவதில் பெண்கள் நல்ல முறையில் முன்னேறியிருப்பதால் அவர்கள் செலெக்ஷனிலேயே வந்து விடுகிறார்கள். அடுத்தபடியாக வெளியிலே உள்ளவர்களுக்குக், கொடுப்பது 10 ஸ்தானம்தான். மற்ற 590 ஸ்தானங்களும் நம் மாநிலத்திலிருக்கின்றவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : In view of the large number of applicants competing for a few seats and in view of the paucity of qualified doctors in our State, and in view of the fact that whatever be the modus operandi adopted in the matter of selection either on the basis of population or the backwardness of the community the nativity certificates can be manipulated by the applicants, would the Government think of the possibility of increasing the seats allotted to the individual colleges, if proper clinical apparatus are available? In the event of such a contingency not arising, would the Government think of establishing one more college anywhere in a backward district or wherever it is found necessary?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is provision for starting one more college during the Third Plan period. In addition to what the hon. Member stated just now, even during this year we have stepped up the number of admissions in the various colleges from the previous level. We are trying to increase the number still further. The only thing is we have to satisfy the University. We are trying as far as possible to increase the teaching facility and trying to step up the number to be admitted in the various colleges.

Livestock farms

*** 1631 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state the locations where the three Live-stock Farms under the Third Five Year Plan are to be located?**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The exact location of the farms has not yet been decided.

SRI M. KALYANASUNDARAM : எந்தெந்த இடங்களில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையாவது அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருநெல்வேலி மாவடத்திலே ஒன்று அமைப்பதற்கு யோசனை செய்யப்பட்டு, அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. உதகையில் இப்போது அங்கிருக்கக்கூடிய நகர சபை நடத்தி வந்த பண்ணையை இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு இப்போது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஜர்சி என்னும் ஒருவகை பசு வளர்க்கப்படும். ஈரோடு தாலூகாவிலே, சென்னிமலை வனப் பகுதிகளிலே ஒருவகை எருமாடு வளர்ப்பதற்கும் ஒரு திட்டம் வைத்திருக்கிறோம்.